**செய்தி வெளியீடு எண்: 493** **நாள்: 26.07.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவம் பயிலும் இறுதியாண்டு கட்டாய சுழற்சிமுறை உள்ளிருப்பு பயிற்சி மருத்துவ மாணவர்கள் (CRRI) மற்றும் அரசு மருத்துவரல்லாத முதுநிலை பட்டம் / பட்டயம் மற்றும் உயர்சிறப்பு மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு (Non-Service Post Graduate Degree/Diploma and Higher Speciality Course Students) அவர்கள் பயிலும் காலத்திற்கு ஊக்கத் தொகையை அரசு வழங்கி வருகிறது. இந்த ஊக்கத்தொகை கடந்த 2014–ஆம் ஆண்டு உயர்த்தி வழங்கப்பட்டது.

தற்பொழுது அரசு மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் மேற்காணும் மருத்துவ மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகையினை உயர்த்தி வழங்குமாறு அரசுக்கு கோரிக்கை அளித்தனர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் செயல்படும் இந்த அரசு, அவர்களின் கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்து அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்திர ஊக்கத் தொகையினை 1.04.2018 முதல் பின்வருமாறு உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

| வ. எண் | மாணவர்கள் | ஆண்டு | தற்போது வழங்கப்படும் மாதாந்திர தொகை (ரூபாய்) | உயர்த்தி வழங்கப்படும் மாதாந்திர தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1. | உள்ளிருப்பு பயிற்சி மருத்துவ மாணவர்கள் (CRRIs) | --- | 13,000/- | 20,000/- |
| 2. | முதுநிலை பட்ட மருத்துவ மாணவர்கள் (Post Graduate Degree students) | முதல் ஆண்டு | 25,000/- | 35,000/- |
| | | இரண்டாம் ஆண்டு | 26,000/- | 37,500/- |
| | | மூன்றாம் ஆண்டு | 27,000/- | 40,000/- |
| 3. | முதுநிலை பட்டய மருத்துவ மாணவர்கள் (Post Graduate Diploma students) | முதல் ஆண்டு | 25,000/- | 35,000/- |
| | | இரண்டாம் ஆண்டு | 26,000/- | 37,500/- |
| 4. | உயர்சிறப்பு மருத்துவ மாணவர்கள் (Higher Speciality Courses/6 years M.Ch Neuro Surgery students) | முதல் ஆண்டு | 30,000/- | 40,000/- |
| | | இரண்டாம் ஆண்டு | 30,000/- | 43,500/- |
| | | மூன்றாம் ஆண்டு | 30,000/- | 45,000/- |
| | | நான்காம் ஆண்டு | 30,000/- | 45,000/- |
| | | ஐந்தாம் ஆண்டு | 30,000/- | 45,000/- |
| | | ஆறாம் ஆண்டு | 30,000/- | 45,000/- |

மேலும் மேற்படி ஊக்கத்தொகையுடன், உள்ளிருப்பு பயிற்சி (CRRI) மருத்துவ மாணவர்களுக்கு ஆண்டுதோறும் 600 ரூபாய் உயர்த்தி வழங்கவும் மற்றும் அரசு மருத்துவரல்லாத முதுநிலை பட்டம் / பட்டயம் மற்றும் உயர்சிறப்பு மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு (Non-Service Post Graduate Degree/Diploma and Higher Speciality Course Students) ஆண்டுதோறும் 1000 ரூபாய் உயர்த்தி வழங்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் 44 கோடியே 17 லட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**